நிதிய முகாமையாளரின் அறிக்கை
உரித்துவ நிதியம்

அன்பார்ந்த முதலீட்டாளரே,

CT CLSA உரித்துவ நிதியத்தின் 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டின்போது (FY25), அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (ASPI) 38.2%[4] ஆல் அதிகரித்தது. இது முன்னைய ஆண்டில் 23.0%[4] ஆல் அதிகரித்தது. 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டில் அனைத்து பங்கு மொத்த விளைவுச் சுட்டியானது 46.4%[4] அதிகரிப்பினை அடைந்தவேளை திரவச் சுட்டியான S&P SL20 சுட்டியானது 42.7%[4] ஆல் உயர்வடைந்தது. CT CLSA உரித்துவ நிதியமானது 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது 28.8% வளர்ச்சியினை பதிவுசெய்தது.

பொருளாதார மீளாய்வு

அடுத்தடுத்து இரண்டு வருடங்களிலான சுருக்கத்தின் பின்னர், இலங்கையின் பொருளாதாரமானது 2024 இல் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியது. குறைந்த அடிநிலை விளைவு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தொடர்ச்சியான தாராள நாணயக் கொள்கையானது இதற்கு துணைபுரிந்தது. இதன் விளைவாக. இலங்கையின் பொருளாதாரமானது முன்னைய ஆண்டின் -2.3%[2] வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது 2024 இல் +5.0%[2] வளர்ச்சியினை பதிவுசெய்தது. மெய்யான மொத்த உள்ளூர் உற்பத்தியிலான (GDP) வளர்ச்சியானது பரவலாக்கப்பட்டதுடன் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் வருடத்திலிருந்து வருடம் வளர்ச்சியினைக் கண்டன.

	2022		2023		2024	
	% வளர்ச்சி	% of GDP	% வளர்ச்சி	% of GDP	% வளர்ச்சி	% of GDP
விவசாயம்	-4.1	7.5	1.6	7.8	1.2	7.5
கைத்தொழில்	-16.0	27.2	-9.2	25.3	11.0	26.7
சேவைகள்	-2.6	59.3	-0.2	60.7	2.4	59.2
GDP	**-7.3**		**-2.3**		**5.0**	

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்

புதிய அமெரிக்க நிர்வாகத்தின் வர்த்தக மற்றும் சுங்கவரிக் கொள்கைகளினால் ஏற்பட்ட உறுதியின்மைகள் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் உலகின் ஏனைய பாகங்களில் காணப்பட்ட உயர்வடைந்த புவிசார் அரசியல்

பதற்றங்களுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உலக பொருளாதார கண்ணோட்டத்தின் பிரகாரம், உலகளாவிய வளர்ச்சியானது 2025 இன் இறுதியில் வேகம் தணிந்து 2.8%[3] ஆக காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் 2026 இன் இறுதியில் 3.0%[3] ஆக மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

<u>வட்டி வீதச் சூழல்</u>

<table>
<tr><th></th><th>Mar-24</th><th>Jul-24</th><th>Nov-24</th></tr>
<tr><td>SDFR (%)</td><td>8.50</td><td>8.25</td><td rowspan="2">8.00</td></tr>
<tr><td>SLFR (%)</td><td>9.50</td><td>9.25</td></tr>
<tr><td>SRR (%)</td><td>2.00</td><td>2.00</td><td>2.00</td></tr>
</table>

மூலம்: இ.ம.வ.

இலங்கை மத்திய வங்கியானது அதன் தாராளமான நாணயப் கொள்கை நிலைப்பாட்டினை நிதியாண்டு 25 இல் தொடர்ந்தது. ஓர் உயர்ந்த அடிநிலை விளைவிற்கு மத்தியில் விலை அழுத்தங்கள் குறைவடைந்தமை, சாதகமான பண்டங்களின் விலைகள் மற்றும் நிர்வாக விலை குறைப்புகள் இதற்கு காரணமாய் இருந்தபோதிலும், பொருளாதார மீட்சியினால் துணையளிக்கப்பட்டு நுகர்வோர் கேள்வியானது படிப்படியாக உயர்வடைந்தது. அதேநேரம், வங்கியியல் துறையின் ஆரோக்கியமான திரவத்தன்மை மட்டங்கள் குறைவான விளைவு வீதங்களுக்கு துணையளித்தன. ஒற்றை எண் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் படிப்படியாக புதிய கடனுக்கான கேள்வியினை அதிகரித்ததுடன், தனியார் துறை கடன் வளர்ச்சியின் வேகமானது நிதியாண்டு 25 முழுவதும் மாதத்திலிருந்து மாதம் பலமடைந்து மார்ச் 2025 இல் வருடத்திலிருந்து வருட வளர்ச்சியாக +14.0%[1] இனை பதிவுசெய்தது.



மூலம்: இ.ம.வ.

	Oct-24	Nov-24	Dec-24	Jan-25	Feb-25	Mar-25
தனியார்துறை கடன் வளர்ச்சி (%)	9.2	9.5	10.7	11.4	12.8	14.0

மூலம்: இ.ம.வ.

<u>வெளிநாட்டு வர்த்தகம்</u>

இறக்குமதிகளிலான வளர்ச்சி ஏற்றுமதியிலான வளர்ச்சியினை விஞ்சியதனால் வணிகச்சரக்கு வர்த்தக பற்றாக்குறையானது 2024 இல் USD 6 பில்லியனுக்கு[1] மேலாக விரிவடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் 2024 இல் வருடத்திலிருந்து வருடம் +7.2%[1] ஆல் வளர்ச்சியடைந்தது. இதற்கு செங்கடல் நெருக்கடியிலிருந்து எழுந்த கப்பல் எரிபொருளுக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியிலான முன்னேற்றம் (+97.2%) துணையளித்தது. மேலாக, உணவு, மென்பானம் மற்றும் புகையிலைத் துறையானது இரட்டை எண் வளர்ச்சியுடன் ஏற்றுமதித் துறைக்கு பங்களித்தவேளை நாட்டின் பாரிய ஏற்றுமதித் துறையான ஆடை மற்றும் ஜவுளி ஒரு மிதமான +4.9% வளர்ச்சியினை அடைந்தது. மேம்பட்ட செலவழிப்பு வருமானம் மற்றும் உயர்ந்த பொருளாதார செயல்பாட்டிற்கு மத்தியில் நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களது இறக்குமதிகள் இரட்டை எண் வளர்ச்சியாக முறையே +13.9% மற்றும் +25.6% இனை பதிவுசெய்தன. வணிகச் சரக்கு பற்றாக்குறையானது விரிவடைந்து காணப்பட்டபோதிலும், மேம்பட்ட சுற்றுலாத்துறை வருமானங்கள் (+53.2%) மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களிடமிருந்தான அதிகரித்த பங்களிப்புக்கு (+10.1%) மத்தியில் பொருளாதாரமானது 2024 இற்கு ஒரு நடைமுறைக் கணக்கு மிகையினை பதிவுசெய்தது.

(In US $Mn)	2023	2024	YoY வளர்ச்சி (%)	Oct-24	Nov-24	Dec-24
ஏற்றுமதிகள்	11,911	12,772	*7.2%*	1,158	994	1,102
இறக்குமதிகள்	16,811	18,841	*12.1%*	1,702	1,496	1,924
வர்த்தக நிலுவை	**-4,900**	**-6,069**		**-544**	**-502**	**-823**
தொழிலாளர் பணமனுப்பல்கள்	5,970	6,575	*10.1%*	588	530	614
சுற்றுலாத்துறை	2,068	3,169	*53.2%*	186	273	362
நடைமுறைக் கணக்கு மீதி	1,440	1,316	*-8.6%*	109	167	-509

மூலம்: இ.ம.வ.

நாணயமாற்று வீதச் சூழல்

2023 இல் காணப்பட்ட இரட்டை எண் பெறுமதி உயர்வின் பின்னணியில், மேம்பட்ட பாரியபொருளாதாரம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையினால் இலங்கை ரூபாயானது தொடர்ச்சியாக வலுவடைந்து 31 டிசம்பர் 2024 இல் அமெரிக்க டொலருக்க எதிராக ரூபா 292.58 ஆக காணப்பட்டதுடன் இது வருடத்திலிருந்து வருடம் +10.7%[1] உயர்வாகும். தற்போதைய IMF திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியானது அதன் ஒதுக்கத்தை கட்டியெழுப்பும் இலக்குகளின் ஒரு பகுதியாக 2024 இல் சாதனை மிக்களவு USD களை கொள்வனவு செய்தபோதிலும் இலங்கை ரூபாயானது வலுவடைந்தது. இதன் விளைவாக மே 2025 இன் இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் ஒரு மதிப்பிடப்பட்ட USD 6.3[1] பில்லியனாக முன்னேற்றமடைந்தன (இது பயன்பாட்டில் நிபந்தனையினைக் கொண்ட PBoC Swap உள்ளடங்கலாகும்).



மூலம்: இ.ம.வ.

பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி (CCPI, 2021=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டி (NCPI, 2021=100) என்பவற்றால் அளவிடப்படும் மொத்த பணவீக்கத்தின் மாற்றமானது 2024 இல் வருடத்திலிருந்து வருடம் தொடர்ச்சியாக வேகந்தணிந்து செப்டம்பர் 2024 இல் பணச்சுருக்க நிலைமைகளை எட்டியது. பொருளாதார செயற்பாட்டிலான ஒரு மீளெழுச்சி காணப்பட்டபோதிலும், வலுவிலான நிர்வாக விலைக் குறைப்பு, இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்வு மற்றும் குறைவான எரிபொருள் விலைகள் என்பன பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்தின. மொத்த பணவீக்கமானது 2025 இன் இரண்டாம் அரையாண்டில் இலங்கை மத்திய வங்கியின் மத்தியகால இலக்கான 5.0% நோக்கி படிப்படியாக உயர்வடையும் என எதிர்பார்க்கின்றது (-0.7%[2] மே 2025இல்; CCPI, 2021=100).



மூலம்: இ.ம.வ.

<u>நிதிசார் கணக்குகள்</u>

அதிகரித்த பொருளாதார செயற்பாடுகளின் பின்னணியில் பெறுமதி சேர்த்தல் வரி மற்றும் கலால் வரி போன்ற நேரில்லா வரிகள் கணிசமாக வளர்ச்சியடைந்ததனால் நிதிசார் வருவாயானது ரூபா 4 டிரில்லியனை[5] எட்டியதுடன் (13.5% of GDP) வருடத்திலிருந்து வருடம் +32.2%[5] வளர்ச்சியினை பதிவுசெய்தது. உயர்ந்த பெருநிறுவன இலாபகரத்தன்மை மற்றும் சிறந்த வரி வருவாய் திரட்டல்/நிர்வாகத்தினால் துணையளிக்கப்பட்டு வருமானத்திலான வரியானது வருடத்திலிருந்து வருடம் முன்னேற்றமடைந்தது. மேற்குறிப்பிட்ட வருமானம் ஈட்டல் வழிமுறைகள், 2024 இற்கான வரி வருவாய் திரட்டல் மற்றும் முதன்மை மிகை என்பவற்றைப் பொறுத்தளவில் இலங்கை அரசாங்கம் IMF இன் அளவியல் செயற்திறன் இலக்குகளை சந்திப்பதனை இயலுமையாக்கியது. தொடர்ச்சியான செலவினமானது GDP இன் ஒரு சதவீதமாக 17.9%[5] இற்கு ஓரளவு அதிகரித்தது. இதற்கு வட்டி செலவினத்திலான வருடத்திலிருந்து வருட அதிகரிப்பான +9.5%[5] உம் மானியங்கள் மற்றும் மாற்றல்களிலான குறிப்பிடத்தக்க வருடத்திலிருந்து வருட அதிகரிப்பும் காரணியாயிருந்தன. எவ்வாறாயினும் மூலதனச் செலவினங்களிலான அரசாங்கத்தின் செலவழிப்பானது மந்தமாக காணப்பட்டு GDP இன் 2.7% இற்கு மாத்திரமே கணக்கீடு செய்தது. IMF இன் மூன்றாவது மீளாய்வின் பிரகாரம், GDP இற்கான அரசாங்க வருவாயானது 2024 மற்றும் 2025 இல் முறையே 15.1%[3] and 15.3%[3] ஆக உயர்வடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதற்கு முதன்மையான துணையாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தடையிலான நீக்கம் காணப்படுகின்றது.

உருப்படி	2022 LKR Bn	2023 LKR Bn	2024 (தற்காலிக) LKR Bn	2025 (மதிப்பீடு) LKR Bn
மொத்த வருவாய்	2,013	3,074	4,091	4,990
GDP இன் % ஆக	***8.3***	***11.1***	***13.6***	***15.1***
மொத்தச் செலவினம்	4,472	5,357	6,131	7,190
முதன்மை மிகை / (பற்றாக்குறை)	**-895**	**173**	**650**	**750**
GDP இன் % ஆக	***-3.7***	***0.6***	***2.2***	***2.3***

மூலம்: நிதி அமைச்சு

சந்தை மீளாய்வு

குறைவான வட்டி வீத நிலைமையின் காரணமாக உரித்துவ முதலீடுகளுக்கான அதிகரித்த ஈர்ப்பினால் துணையளிக்கப்பட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது 2024 இன் முதலாம் அரையாண்டில் உயர்வடையும் பாதையினை பராமரித்தது. எவ்வாறாயினும், 2024 இன் 3ஆம் காலாண்டில் ஜனாதிபதி தேர்தல்களை முன்னிட்டு நிலவிய முதலீட்டாளர்களது உயர்வடைந்த உறுதியின்மைக்கு மத்தியில் கொ.ப.ப. வருடத்தின் ஆரம்பத்திலிருந்து அடைந்த வளர்ச்சியினை கைவிட்டது. சந்தை எதிர்பார்ப்பிற்கு எதிர்மாறாக, தேர்தல்களின் பின்னர் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி, திரு. அனுர குமார திசாநாயக்க மற்றும் அவரது அரசாங்கமானது நடைமுறையிலிருந்த IMF திட்டத்தை தொடர்வதற்கு தீர்மானித்தமை மற்றும் இறுதிக் கட்ட பேரம்பேசலில் காணப்பட்ட சர்வதேச இறையாண்மை முறிகளின் (ISB) மீள்கட்டமைப்பின் வெற்றிகரமான நிறைவினால் கொ.ப.ப. திரண்டது. இதன் விளைவாக, அ.ப.வி.சு. ஒரு அற்புதமான வளர்ச்சியினை (+49.7%[4]) அடைந்து டிசம்பரில் அதன் முன்னைய உச்சத்தைத் மீண்டும் தொட்டது. மிகவும் திரவத்தன்மையுடைய சுட்டியான S&P SL20 சுட்டி வருடத்திலிருந்து வருடம் +58.5%[4] வளர்ச்சியினைக் கண்டது. மேலும், சந்தையின் சராசரி நாளாந்தப் புரள்வானது வருடத்திலிருந்து வருடம் +32.0%[4] ஆல் உயர்வடைந்து ரூபா 2,240[4] மில்லியனை அடைந்தவேளை சுட்டியின் சந்தை மூலதனவாக்கமானது 31 டிசம்பர் 2024 இல் ரூபா 5,696[4] பில்லியனாக உயர்வடைந்தது (பெயரளவு GDP இன் 23.6%). சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்குபற்றலானது 10% இற்கும் குறைவாக காணப்பட்டவேளை 19,019 புதிய ம.வை.தி. கணக்குகள் இவ்வாண்டின்போது திறக்கப்பட்டன (31 டிசம்பர் 2024 இல் 706,864 ம.வை.தி. கணக்குகள்).

சந்தை குறிகாட்டிகள்	31-Mar-22	31-Mar-23	31-Mar-24	31-Mar-25
ASPI (% YoY)	25.0	4.5	23.0	38.2
ASTRI (% YoY)	25.2	4.5	26.9	46.4
S&P SL20 (% YoY)	6.4	-11.5	23.7	42.7
சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.)	3,826.5	3,903.5	4,535.0	5,696.0
சராசரி நாளாந்த புரள்வு (ரூ.மில்.)	4,798.5	2,143.5	1,579.9	2,240.0
சந்தை PER (X)	8.8	5.0	9.9	8.3
தேறிய வெளிநாட்டு பாய்ச்சல்(ரூ.பில்.)	-36.6	33.0	48.9	-12.7

மூலம்: கொ.ப.ப. தரவு



மூலம்: கொ.ப.ப. தரவு

CT CLSA உரித்துவ நிதியத்தின் செயற்திறன்

CT CLSA உரித்தவ நிதியமானது மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டின்போது +28.8% (ASPI இன் +38.2% இற்கு எதிராக) அதிகரிப்பினை பதிவுசெய்தவேளை கடந்த ஐந்து வருடங்களில் ஒரு வருடாந்த விளைவாக +28.4% இனை அடைந்தது (ASPI இன் +28.2% இற்கு எதிராக). 2025 ஆம் நிதியாண்டின்போது நிதியமானது உரித்துவம் நோக்கி ஒரு உயர்ந்த மூலோபாய சாய்நிலையினை தொடர்ந்தும் பராமரித்தவேளை விலை அசைவுகள் மற்றும் சந்தை அபிவிருத்திகளின் அடிப்படையில் சொத்து ஒதுக்கத்திலான வழமையான தந்திரோபாய தீர்மானங்களை மேற்கொண்டதுடன், சந்தை திடமாயிருக்கும்போது பகுதியளவில் இலாபத்தை எய்தப்பெற்றும் சந்தை பலவீனத்தின்போது பங்குகளை திரட்டவும் செய்தது. நிதியமானது மூலதனப் பொருட்கள், வங்கிகள் மற்றும் சடப்பொருள் துறைகளில் மிகை நிறையிடலை பராமரித்தது. பொருளாதார நடவடிக்கைகளின் மீட்டல், ISB மீள்கட்டமைப்பின் நிறைவினைத் தொடர்ந்து சொத்துக்களின் உயர்நோக்கிய மீள்விலையிடல், மற்றும் குறைவான அடிநிலையிலிருந்து நுகர்வு மற்றும் கட்டுமான கேள்வியின் புதுப்பிப்பு என்பவற்றிலிருந்து இத்துறைகள் நன்மையடைந்தன. ஒரு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கத்தினை

பராமரிக்கும் நிதியத்தின் மூலோபாயமானது 2025 நிதியாண்டின்போது 5.6% தடங்காண் பிழையினை பராமரிப்பதனை இயலுமையாக்கியது. இது 2024 இன் போது சந்தையில் காணப்பட்ட மிகஅதிகமான தளம்பல்களிலிருந்து அலகுடைமையாளர்களை பாதுகாத்தது.

முதல் 5 துறைகள்	நிறை (%)
மூலதனப் பொருட்கள்	24.6%
வங்கிகள்	21.6%
சடப்பொருள்	12.4%
நுகர்வோர் நிலைப்பொருட்களும் ஆடையும்	6.4%
பன்முகப்படுத்தப்பட்ட நிதி	4.7%

முதல் 5 பங்கு நிலைகள்	நிறை (%)
ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்	7.6%
நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் - வாக்குரிமையுள்ள	7.6%
ஹேலீஸ் பெப்ரிக்	5.4%
சம்பத் பேங்க்	5.3%
ஹேமாஸ் ஹோல்டிங்ஸ்	4.8%

மூலம்: கொ.ப.ப. மற்றும் CEF மதிப்பிடல் தாள்





மூலம்: CT CLSA எஸட் மெனேஜ்மன்ட்

எதிர்பார்ப்புக்கள். கண்ணோட்டம் மற்றும் மூலோபாயம்

இலங்கையில் காணப்பட்ட முன்னேற்றகரமான பாரியபொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை, 2022 இன் பொருளாதார நெருக்கடியிலிருந்து அரச நிதிநிலைமையில் காண்பிக்கப்பட்ட ஒழுக்கம் மற்றும் 2025 இன் 2ஆம் அரையாண்டில் குறைவான-மத்திய பணவீக்க மட்டங்கள் என்பன 2025 இன் இறுதிவரை சந்தை வட்டி வீதங்களை பெரும்பாலும் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ச்சியாக குறைந்த வட்டி வீத நடப்புமுறையின் எதிர்பார்ப்பானது இலங்கையின் உரித்துவங்களது வாய்ப்பிற்கு நற்செய்தியாய் இருப்பதுடன், உரித்துவங்களில் உழைக்கும் பங்கிலாபங்கள் மாத்திரமே வருமான வரிக்குட்படுவதனால் இவை வரி பயனுறுதியான மேலதிக நலனையும் அடைகின்றது. இந்தப் பின்னணியில், உடனடி சமீப காலத்தில் உரித்துவங்கள் நோக்கிய உள்ளூர் நிதிப் பாய்ச்சல்கள் தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றோம். பெறுமதியிடலைப் பார்க்கும்போது 2023 இன் நடுப்பகுதியில் ஆரம்பித்த தளர்வான நாணயக் கொள்கையிலிருந்து சுட்டியானது +76.6% ஆல் உயர்வடைந்துள்ள போதிலும், இதற்குப் பின்புலமாக 2024 இல் பெருநிறுவன இலாபங்களில் ஒரு திடமான மீட்டல் காணப்பட்டது (+42.5% YoY). சந்தையானது தொடர்ந்தும் அதன் வரலாற்று ரீதியான சராசரியிலிருந்து கழிவுடன் வர்த்தகம் செய்யப்படுவதனால், மேலும் உயர்நோக்கிய மீள்மதிப்பீட்டிற்கான வாய்ப்பு காணப்படுவதுடன், 2025 இன் இறுதியில் பெருநிறுவன இலாபங்கள் இரட்டை எண் வளர்ச்சியினைக் காணும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

உயர்நோக்கிய பெறுமதியிடல் மீள்மதிப்பீடு மற்றும் இலாப வளர்ச்சியிலான மேம்பட்ட கண்ணோட்டத்திலிருந்து எழும் விலை உயர்வினை பயன்படுத்துவதற்காக நாம் தொடர்ந்தும் உரித்துவத்தில் மிகை நிறையிடலை பராமரிப்போம். சுட்டி பெறுமதியிடலானது அதன் வரலாற்று சராசரியினை நோக்கி

நகரும்போது நிதியமானது முதலீட்டுத் தேக்கத்திலுள்ள உரித்துவ எண்ணிக்கையினை குறைப்பதற்கு எண்ணியுள்ளதுடன், நிதியமானது வங்கியியல், மூலதனப் பொருட்கள், சடப்பொருள் துறைகளினுள் அதன் உயர் நம்பிக்கைத் தெரிவுகளில் உயர்ந்த செயலூக்கமான நிறையிடலை கடைப்பிடிக்கும். வங்கியியல் துறையில் மத்திய காலத்தின் மீது எதிர்வுகூறப்பட்ட நடுப்-பதின்ம உரித்துவத்திலான விளைவு இருந்தபோதிலும் இத்துறையில் நிலைத்திருக்கும் பெறுமதியிடல் கழிவு, நிலைபேறுடைய கேள்வியினால் வழிநடத்தப்பட்ட நுகர்விலான பருமனளவு மீட்பு, கட்டுமானத்துறையிலான பொருளாதார மீட்பு என்பன மத்திய காலத்தில் நிதியத்திற்கு இடர் நீக்கிய இலாபத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிலைபேறுடைய இலாப வளர்ச்சி, திடமான கட்டுப்பாடற்ற காசுப் பாய்ச்சல் உருவாக்கம், சுறுசுறுப்பான மற்றும் ஆற்றலுடைய முகாமைத்துவ அணிகள் மற்றும் நியாயமான மதிப்பீடுகள் என்பன மத்திய காலத்தின்மீது அதன் அலகுடைமையாளர்களுக்கு சராசரிக்கு மேலான இடர் செம்மையாக்கப்பட்ட விளைவுகளை உருவாக்குவது நோக்கி தயாராயுள்ளது.

<u>மூலங்கள்</u>

[1] இலங்கை மத்திய வங்கி (www.cbsl.gov.lk)

[2] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (www.census.gov.lk)

[3] சர்வதேச நாணய நிதியம் (www.imf.org)

[4] கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (www.cse.lk)

[5] நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (www.treasury.gov.lk)